**புதுவை அரசு போக்குவரத்துத் துறை**
**அரசு வாகன பணிமனை**
**சாரம், புதுச்சேரி**
***

**பயன்பாட்டில் இல்லாத பழைய அரசு வாகனங்களை ஏலம் கோருவதற்கான நிபந்தனைகள்**

1. பயன்பாட்டில்லாத பழைய இரண்டு மற்றும் நான்கு சக்கர அரசு வாகனங்களை www.auctionindia.com என்ற இணையதளத்தின் வழியாக 03.01.2018 முதல் 08.01.2018 வரை, நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை ஆட்டோ எக்ஸ்டன்சன் வசதியுடன் அதை நடத்தும் ஏஜன்சி மூலம் ஏலம் நடத்தப்படுகிறது.

2. ஏலம் கேட்க விருப்பமுடையவர்கள் ரூ.250/- (GST உள்ளடங்கியது) ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா என்ற வங்கியின் மூலமாக மட்டுமே **Pay Drawing and Disbursing Officer, Government Automobile Workshop, Puducherry** என்று குறிப்பிட்டு கேட்பு வரைவு ஓலை ஒன்று (Demand Draft) எடுத்து விண்ணப்பப்படிவத்தைப் பெற வேண்டும்.

3. ஏலம் கேட்க விருப்பமுடையவர்கள் மேற்கண்ட துறையால் வரையறுக்கப்பட்டு பகுதி-1ல் (Annexure-I) குறிப்பிட்டுள்ளப்படி கட்டாய வைப்புத்தொகை ஒவ்வொரு நான்கு சக்கர வாகனத்திற்கும் மற்றும் ஒவ்வொரு இரண்டு சக்கர வாகனத்திற்கும் தனித்தனியாக கேட்பு வரைவு ஓலையை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா என்ற வங்கியின் மூலமாக மட்டும் (Demand Draft) **Pay Drawing and Disburing Officer, Government Automobile Workshop, Puducherry** என்று குறிப்பிட்டு எடுத்து ஏல விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

4. 03.01.2018 to 08.01.2018 12.30 P.M. வரை ஏலம் கேட்பவர் வேலை நாட்களில் 03.1.2018 ஆம் நாள் காலை 10.00 மணி முதல் 08.01.2018 ஆம் நாள் மதியம் 12.30 வரை துறையால் வரையறுக்கப்பட்டத் தொகையுடன் கூடிய பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தையும் மற்றும் கட்டாய முன் வைப்புத் தொகைக்கான வரைவு கேட்பு ஓலையும் (Earnest Money Deposit) செலுத்திய பின், ஏலம் கேட்பவருக்கு, ஏலத்தில் கலந்து கொள்வதற்கான இணையதளத்தின உபயோகிப்பவர் பெயர் (User ID) மற்றும் ரகசிய பதிவு வார்த்தை (Password) அளிக்கப்படும்.

..2/-

5. இணையதளத்திற்காக அளிக்கப்படும் முகவர் உபயோகிப்பவர் பெயர் (User ID) மற்றும் ரகசிய பதிவு வார்த்தை (Password) விண்ணப்பதாரரின் பொறுப்பில் பாதுகாக்கப்பட வேண்டும். தொலைந்து போனால் புதிய ரகசிய பதிவு வார்த்தை மறுபடியும் தேவைப்படும் பட்சத்தில் மறுபடியும் விண்ணப்பிக்க கட்டணம் மற்றும் கட்டாய முன் வைப்புத்தொகை செலுத்த வேண்டும்.

6. கட்டாய முன் வைப்புத் தொகைக்கான வரைவு ஓலை செலுத்தக் கடைசி தேதி 08.01.2018 நேரம் மதியம் 12.30 அதாவது கடைசி நாள் வரை இந்த காலக்கெடுவிற்கு முன்னதாக முன் வைப்புத் தொகை செலுத்துபவர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

7. ஏலத்தில் பகுதி-1ல் குறிப்பிட்டுள்ள ஆரம்ப ஏலத்தொகைக்கு மேற்கொண்டு தங்கள் ஏலத் தொகையை குறிப்பிட வேண்டும்.

8. வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு கட்டாய வைப்புத் தொகைக்கான அவர்களுடைய வரைவு காசோலையை மறுநாள் திருப்பித்தரப்படும். ஏலத்தில் வெற்றி பெறும் பட்சத்தில் அவர்கள் செலுத்த வேண்டிய முழு தொகையில் வைப்பு தொகையை சரி செய்து மீதித் தொகையை செலுத்த வேண்டும்.

9. வெற்றி பெற்ற ஏலதாரர் ஏலத்தொகை முழுவதையும் 3 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அப்படி செலுத்தத் தவறும் பட்சத்தில் அவருடைய முன் வைப்பு கேட்பு தொகைக்கான வரைவு ஓலையை இழக்க நேரிடும். மேலும் அவருக்கு அடுத்தப்படியாக அதிகம் கேட்டிருந்த ஏலதாரருக்க தகவல் கொடுக்கப்பட்டு அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படும். தகவல் கொடுக்கப்பட்ட ஏலதாரர் 3 தினங்களுக்குள் அந்த முதல் ஏலதாரர் வெற்றி பெற்ற ஏலத்தொகை முழு தொகையையும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்.

10. ஏலத்தில் நான்கு சக்கர வாகனங்களுக்குக் குறைந்த பட்ச கேட்புத்தொகை ரூ.500/-ன் மடங்காகவும் இரண்டு சக்கர வாகனங்களுக்கு ரு.100/ன் மடங்காகவும் ஏலக் கேள்விகள் இருக்க வேண்டும்.

11. ஏலம் தொடர்பான தகவல் பரிமாற்றம் செய்வதற்கு ஏலம் கேட்க விருப்பமுடையவர்கள் அவர்களுடைய தொலைபேசி/கைப்பேசி எண்ணை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

12. ஏலத்தில் வெற்றி பெற்ற ஏலதாரர் அங்கிகரிக்கவோ அல்லது வாங்கும் வாகனத்தை வேறு ஒருவருக்கோ மாற்ற உரிமை கிடையாது. வாகனத்தை கொண்டு செல்லும் போது ஏலதாரர் முன்னின்று சம்பந்தப்பட்ட எல்லா படிவங்களை கையெழுத்திட்டு துறையின் வாயில் அனுமதிச் சீட்டு பெற வேண்டும்.

13. வெற்றி பெற்ற ஏலதாரர் அந்த வாகனங்களை ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் தன் சொந்த செலவில் எடுத்துச் செல்ல வேண்டும்.

14. ஏலம் முடிவு செய்யப்பட்ட பின் அந்த வாகனங்களின் நிலைக்கோ (அ) மதிப்பிற்கோ செயற்பொறியாளர் அவர்கள் பொறுப்பேற்க முடியாது.

15. ஏலத்தில் எடுக்கப்படும் தொகையுடன் சேர்த்து சரக்கு மற்றும் சேவை வரி @ 28% + பொருந்தும் தீர்வை வரி @ 17% அல்லது 20% வண்டிகளின் தன்மைக்கு ஏற்ப சேர்த்து வசூலிக்கப்படும்.

16. ஏலத்தில் எடுக்கப்படும் தொகையுடன் இணைய தளத்திற்கான ஏலச் செலவு @ 2% சேர்த்து ஏலம் எடுத்தவரிடம் வசூலிக்கப்படும். மேலும் இந்தத் தொகையுடன் GSTயும் சேர்த்து வசூலிக்கப்படும்.

17. ஏலம் கேட்க விருப்பமுடையவர்கள் இணைப்பில் குறிப்பிட்டுள்ளபடி வாகனங்களை அரசு அலுவலக நேரத்தில் அந்தந்த துறையின் அனுமதியுடன் 28.12.2017 முதல் பார்வையிடலாம்.

18. மேற்கண்டவற்றில் சர்ச்சை ஏதேனும் ஏற்பட்டால், செயற்பொறியாளர் அரசு பணிமனை, போக்குவரத்துத் துறை, புதுச்சேரி அவர்களின் முடிவே இறுதியானது.

19. எவ்வித காரணமின்றி ஏலத்தை ஏற்கவோ அல்லது மறுக்கவோ அல்லது மாற்றம் செய்யவோ செயற்பொறியாளருக்கு உரிமை உள்ளது.

**செயற்பொறியாளர்**